**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**MCOP.No.121/2023 & 118/2023, 119/2023**

**P.W.1**

(சாட்சிக்கு திரு.V.பிரதாப், உதவியாளர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

| | |
|---|---|
| பெயர் | ராமமூர்த்தி |
| த/பெ. | ராஜா |
| வயது | 40 |
| வசிப்பிடம் | எண்.11, வசந்தம் நகர், திம்மாவரம், செங்கல்பட்டு |
| தொழில் | தற்போது வேலையில் இல்லை |

**முதல் விசாரணை** 25.02.2026

நான் இந்த வழக்கில் மூன்றாம் மனுதாரர். இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். 08.04.2023 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.1. செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கை நகல் ம.சா.ஆ.2. எனது தகப்பனார் ராஜாவின் இறப்பு சான்றிதழ் கணினி நகல் ம.சா.ஆ.3. 14.05.2023 தேதியிட்ட என் தகப்பனாரின் வாரிசு சான்றிதழ் கணினி நகல் ம.சா.ஆ.4. என் தகப்பனாரின் ஓய்வூதிய நகல் ம.சா.ஆ.5. முதல் மனுதாரரின் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.6. முதல் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் நகல் ம.சா.ஆ.7. 2ம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.8. 2ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் நகல் ம.சா.ஆ.9. 3ம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.10. 3ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் நகல் ம.சா.ஆ.11. 3ம் மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் நகல் ம.சா.ஆ.12. மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல் ம.சா.ஆ.13. 19.04.2023 தேதியிட்ட பார்வதி மருத்துவமனையால் வழங்கப்பட்ட 3வது மனுதாரரின் விடுவிடுப்பு அறிக்கை அசல் ம.சா.ஆ.14. 19.04.2023 தேதியிட்ட பார்வதி மருத்துவமனையால் வழங்கப்பட்ட பணம் செலுத்திய ரசீது அசல் ம.சா.ஆ.15. 3ம் மனுதாரா பார்வதி மருத்துவமனையில்

வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றதை காட்டும் மருத்துவமனை பணப்பற்று ரசீது (12 எண்ணிக்கை) ம.சா.ஆ.16. 3வது மனுதாரர் முதுகலை பொறியியல் படித்ததை காட்டும் பட்டம் தகுதி சான்று ம.சா.ஆ.17. 07.12.2006 தேதியிட்ட இளவர் தட்சநேத்திரனின் பிறப்பு சான்று ம.சா.ஆ.18. இளவர் தட்சநேத்திரனின்ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.19. பார்வதி மருத்துவமனையால் வழங்கப்பட்ட இளவா் தட்சநேத்திரனின் மருத்துவ விடுவிப்பு அறிக்கை ம.சா.ஆ.20. பார்வதி மருத்துவமனையில் பணம் செலுத்தியதற்கான ரசீதுகள் அசல் ம.சா.ஆ.21. இளவர் தட்சநேத்திரன் பார்வதி மருத்துவமனையில் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றதை காட்டும் மருத்துவமனை பணப்பற்று ரசீது (10 எண்ணிக்கை) ம.சா.ஆ.22.

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**(குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)**